
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 16 ஜூலை [illegible]




வெளியிடுவோர்


**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

☎04257-230030, 230382. Cell : 98427 - 30382

E-mail : kangayamcofc@eth.net




## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | சுவிசேஷத்தை கேள்விப்படுதல் | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 14 |
| 4. | வாலிபர் பகுதி | 17 |
| 5. | சிறுவர் பகுதி | 21 |
| 6. | I தெசலோனிக்கேயர் ஒரு கண்ணோட்டம் | 23 |
| 7. | தேவனுடைய பரிசுத்த ஆவியை... | 24 |
| 8. | கொஞ்சத்தில் உண்மையாயிரு | 29 |

# THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

Editor
S. Rajanayagam

Honorary Editor
J.C. Choate

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

*Pleading for the restoration of pure New Testament Christianity*

Vol.17 July- 2003 Issue-7


ஆசிரியர் உரை

## "நாம் என்ன செய்யப் போகிறோம்?"

நாம் வாழும் இந்த உலகம் ஓர் ஏமாற்று உலகம். இங்கே, ஏமாற்றத்திற்கு இவ்வுலகில் துளியும் பஞ்சம் இல்லை. ஆகையால், ஏமாற்றம் என்றால் என்னவென்றே எனக்குத் தெரியாது என்று யாரும் சொல்ல முடியாது. இன்னும் சொல்லப் போனால், ஏமாற்றத்தை நாம் நாள்தோறும் அல்லது குறைந்த பட்சம் அவ்வப்பொழுதாகிலும் அனுபவிக்கிறவர்களாகவே வாழ்ந்து கொண்டுள்ளோம். யாராவது ஒருவர், எனக்கும், ஏமாற்றத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை, நான் ஒருபோதும் ஏமாந்ததில்லையென்று சொல்வாரானால், அப்படிப்பட்டவர் நம்மை ஏமாற்றத் தயாராகி விட்டதால், நாம் உடனடியாக உஷராகிவிட வேண்டும்.

சரி, பொதுவாக, ஓர் ஏமாற்றத்திற்குப் பல காரியங்கள் காரணமாக இருக்க முடியும். ஏதாவது ஓர் ஆசை நிறைவேறாமல் போவதினிமித்தம் ஏமாற்றம் கிடைக்கலாம் அல்லது ஓர் எதிர்பார்ப்பு பொய்த்துப் போவதின் மூலம் ஏமாற்றம் அடையும் சூழ்நிலை ஏற்படலாம் அல்லது ஒரு நம்பிக்கை சிதைந்து போவதின் மூலம் ஏமாற்றம் அடையலாம். வேறு பல காரணங்களும் இருக்கலாம். இந்த ஏமாற்றம், அறிந்தவர்களிடத்திலிருந்தும் வரலாம், அறியாதவர் களிடத்திலிருந்தும் வரலாம். குடும்பத்திலிருந்தும் வரலாம், புறத்திலிருந்து வரலாம், பழகியவர்களிடத்திலிருந்தும் வரலாம், பழக்கமில்லாதவர் களிடத்திலிருந்தும் வரலாம். விசுவாசியிடமிருந்தும் வரலாம். அவிசுவா சியிடமிருந்தும் வரலாம். எப்படி வந்தாலும், யாரிடத்திலிருந்து வந்தாலும், எங்கிருந்து வந்தாலும், எந்த ரூபத்தில் வந்தாலும் ஏமாற்றம் ஏமாற்றமே.

ஒருவேளை, மனிதர்களாகிய நமக்கு, ஏமாந்ததின் அனுபவம் இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. ஏனெனில், ஏதோ ஒரு சில சந்தர்ப்பங்கள் தவிர, பெரும்பாலான நேரங்களில், அப்படிப்பட்ட

ஏமாற்றத்திற்கு நாம் தகுதியானவர்களாகவே இருப்போம். நாம் செய்ததற்கு அப்படித்தான் வேண்டும் என்பது போலவே நிலைமை இருக்கும். ஆம், பல சமயங்களில், நம்முடைய பேராசையோ அல்லது அவசரமோ அல்லது மதியீனமோ அல்லது வேறு ஏதாவதோ அதற்குக் காரணமாக அமைந்திருக்கும். இதை நம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது. ஆனால், நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்த நம் இயேசுவுக்கு அவருடைய வாழ்க்கையில் "ஏமாற்றம்" இருந்திருக்கிறதென்பது சீரணிப்பதற்கே சிரமமான ஒன்றாக இருக்கிறது. அவரும் ஏமாற்றம் அடைந்திருக்கிறார் என்பதை, பல சந்தர்ப்பங்களில் அவர் எழுப்பியுள்ள கேள்விகளிலிருந்தும், அவர் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளிலிருந்தும் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

நம்முடைய ஏமாற்றத்திற்குப் பல நேரங்களில் நாமே காரணமாக இருப்பதுபோல, அவருக்குக் கிடைத்த ஏமாற்றங்களுக்குக் கண்டிப்பாக அவர் காரணமாக இருந்திருக்க வாய்ப்பில்லை. எப்படியெனில், அவருடைய வாழ்க்கையைப் பற்றி எழுதியுள்ள நான்கு நற்செய்தியாளர்களில் ஒருவர் கூட, அவருக்கு ஆசையோ, பேராசையோ, ஆத்திரமோ, அவசரமோ, நிதானம் தவறிய செயல்பாடோ, மதி குறைவோ, அதீத எதிர்பார்ப்போ இருந்ததாக எங்கும் குறிப்பிடுவதில்லை. இயேசுவிடம் குற்றம் கண்டுபிடிக்க வேண்டுமென்பதையே தங்கள் தொழிலாகக் கொண்டு சுற்றித் திரிந்தவர்களாலேயே அவரிடம் இப்படிப்பட்ட குற்றம் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. மிஞ்சி, மிஞ்சி அவர்களால் என்ன செய்ய முடிந்தது? பொய்ச் சாட்சிகளுக்கு கூலி கொடுத்து, வெத்து வேட்டான குற்றச் சாட்டுகளை "செட்அப்" செய்ய முடிந்தது (மத். 28; 13-15) அதற்கு மேல் எதுவும் முடியவில்லை.

ஆயினும் கூட, அவர் வாயின் வார்த்தைகள், அவர் ஏமாற்றம் அடைந்திருக்கிறார் என்று நமக்கு ஐயத்திற்கிடமின்றிச் சொல்லுகிறபடியால், யாரெல்லாம் அவரை ஏமாற்றியிருக்கிறார்கள், எப்படியெல்லாம் ஏமாற்றியிருக்கிறார்கள், எப்பொழுதெல்லாம் ஏமாற்றியிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முயற்சிப்போம். இதன்மூலம், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில், நாமும் அவரை ஏமாற்றும் பெருந்தவறைச் செய்து நித்திய அழிவுக்குச் சென்று விடாதபடி நம்மைக் காத்துக் கொள்வோம்.

**I ஊழிய நாட்களில் இயேசு ஏமாற்றம் அடைந்திருக்கிறார்.**

பரலோகத் தகப்பனுடைய குமாரனாகிய இயேசுவானவர், யாருக்காக இப்பூமிக்கு வந்து, யாருக்கெல்லாம் நன்மை செய்தாரோ, எவர்களையெல்லாம் நேசித்து ஊழியம் செய்தாரோ, எந்த ஜனங்களை இரட்சிக்க வேண்டுமென்று விரும்பினாரோ, அவர்களாலே அவர் ஏமாற்றத்திற்குள்ளாக்கப்பட்டிருக்கிறார். யோவான் நற்செய்தியாளர், இக்கருத்தைத் தான் இரத்தினச் சுருக்கமாக்கி, "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை

ஏற்றுக் கொள்ளவில்லை" (1; 11) என்று எழுதிக் கொடுத்துள்ளார். ஆகையால், அவருடைய ஊழிய நாட்களில், அவருக்குக் கிடைத்த சில ஏமாற்றங்களைக் குறித்துப் பார்ப்போம்.

ஒரு சமயம் நமதாண்டவர் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில் சமாரியா, கலிலேயா என்னும் நாடுகள் வழியாகப் போனார். அப்பொழுது, இன்றைக்கும் முற்றிலும் குணமாக்கப்பட முடியாத வியாதியாக இருக்கும் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட குஷ்டரோகிகள் பத்துப் பேர், அவர் முன்பாக வந்து பணிந்து எங்களை சுகமாக்கும் என்று கேட்பதற்கு அந்நாட்களில் அனுமதியில்லாதிருந்ததால், அவருக்கு எதிராக **தூரத்திலே நின்று,** "இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும்" என்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர் பார்த்து நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள் (லூக். 17; 10-14) அந்தப் பத்துப் பேருக்கும் கனவிலும் நினைத்துப் பார்த்திராத அற்புத சுகம், விலையுமின்றி, பணமுமின்றி இயேசுவின் வல்லமையால் கிடைத்தது. அவர்களில், **ஒருவன் மாத்திரம்** நன்றி சொல்லத் திரும்பி வந்ததை இயேசுவானவர் கண்டு, சுத்தமானவர்கள் 10 பேர் அல்லவா? **மற்ற ஒன்பது பேர் எங்கே?** என்றார் (17 ; 17) எங்கே, என்ற அவரின் கேள்வி, அந்த ஒன்பது பேர்களினிமித்தம் அவர் ஏமாற்றம் அடைந்திருக்கிறார் என்பதையே சொல்லுகிறது. இந்த ஒன்பது பேரைப் பற்றி என்ன சொல்லுவது? வெறுமனே, நன்றியில்லாதவர்கள் என்று சொன்னால் அது கண்டிப்பாகப் போதாது. அப்படித் தானே !

அடுத்து, உன்னத தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, அன்றைய உலகத்திலிருந்த அனைத்து பட்டணங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டு, "தாவீதின் நகரம்" என்றும், மகா ராஜாவின் நகரம் என்றும், சீயோன் என்றும் சிலாக்கியம் பெற்ற எருசலேம் பட்டணத்தைப் பார்த்து, இயேசுவானவர் "கண்ணீர் விட்டழுதாரே" (லூக். 19 : 41) அப்பொழுது அவருக்கு ஏமாற்றம் இருந்திருக்காதா? ஆதியிலிருந்து, தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளைத் தள்ளிப் போட்ட பட்டணம், தன்னையாகிலும் ஏற்றுக் கொள்ளாதா என்று அவர் எண்ணியிருக்க மாட்டாரா? மோசேயின் பிரமாணம், தன்னைப் பற்றிச் சொல்லியிருப்பதை அறிந்து, உணர்ந்து, தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்த்திருக்க மாட்டரா? அப்படி எண்ணியிருக்காவிட்டால், எதிர்பார்த்திருக்காவிட்டால், எதற்காக அந்தப் பட்டணத்தைப் பார்த்து அவர் கண்ணீர் விட்டழுதிருக்க வேண்டும்? எந்த ஒரு ஏமாற்றமும் இல்லாமல் அவருக்கு கண்ணீர் வந்திருக்குமா? சொல்லுங்கள். எருசலேம் பட்டணத்தார் தங்கள் செய்கையால் அவரை **ஏமாற்றியே** இருக்கிறார்கள். தங்கள் செய்கையால் அவரை அழவும் வைத்திருக்கிறார்கள்.

இன்னும், மத்தேயு 26ம் அதிகாரத்தில், தான் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு

முன்பு, கெத்சமனே என்னும் இடத்திற்கு வந்து, சீடர்களை நோக்கி, நான் அங்கே போய் **ஜெபம் பண்ணுமளவும், நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள்** என்று சொல்லி சற்று அப்புறம் போய், முகங்குப்புறவிழுந்து பாரப்பட்டு, ஜெபித்து, பின்பு சீடர்களிடத்தில் திரும்பி வந்து, அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி : **"நீங்கள் ஒருமணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதா?** (மத். 26 : 36 - 40) என்று ஆதங்கப்பட்டுக் கேட்டுள்ளாரே, அப்பொழுது அவர் சீடர்களினிமித்தம் **ஏமாற்றம் அடையவில்லையா?** ஏமாற்றம் அடையாமல், விழித்திருக்கக் கூடாதா என்று கேட்டிருப்பாரா? சொல்லுங்கள்.

இவைகளை நாம் பார்க்கும் போது, அவரை நம்பி அவரிடம் வந்து நன்மை பெற்றவர்களாலேயே அவருக்கு ஏமாற்றம் கிடைத்திருக்கிறதென்பதையும், நாங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்று சொல்லிக் கொண்டவர்களாலேயே அவருக்கு ஏமாற்றம் கிடைத்திருக்கிறதென்பதையும், இயேசுவுக்கு நெருக்கமாக இருந்தவர்களிடத்திலிருந்தும் அவருக்கு ஏமாற்றம் கிடைத்திருக்கிறதென்பதையும் அறிய முடிகிறது. நாம் இதிலே எந்த ரகத்திலே வருகிறோமென்பதை அப்படியே நெஞ்சின் மேல் கைவைத்து யோசித்துக் கொண்டே தொடர்ந்து படியுங்கள்.

## II உயிர்த்தெழுந்த நாளிலும் இயேசு ஏமாற்றம் அடைந்திருக்கிறார்.

நமதாண்டவருக்கு ஏற்பட்ட ஏமாற்றம் ஊழிய நாட்களோடு முடிந்து விட்டது என்று நாம் கருத முடியாதபடி, அதற்குப் பின் நடந்திருப்பதற்கான சாத்தியக் கூறுகள் நன்றாகவே தெரிகிறது. ஆம், இயேசுவானவர் உயிர்த்தெழுந்த நாளிலும், அவர் ஏமாற்றம் அடைந்திருக்க வாய்ப்புண்டு. மேலேழுந்தவாரியாகப் பார்க்கும் போது, அது ஒரு அற்புதமான நாளாயிற்றே, அந்த நாளில் ஏமாற்றம் அடைவதற்கு ஒரு காரணமும் இல்லையே என்று எண்ணத் தோன்றும். நீங்கள் ஒவ்வொருவரும் எண்ணுவது போல் அந்த நாள் ஒரு வெற்றித் திருநாள் தான். மரணத்தின் மீது, கல்லறையின் மீது, பாவத்தின் மீது வெற்றி கண்ட பொன்னாள் தான். யாரும் இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால், அவருடைய கல்லறைக்கருகில் நீங்கள் இன்னும் கொஞ்சம் நெருங்கிப் பார்த்தால் அவர் ஏமாற்றமடைந்திருக்க வேண்டும் என்பதை நன்றாக உணரமுடியும்.

ஆம், மரணத்தின் மீது வெற்றி கண்டு, ஜெயக் கிறிஸ்துவாக அவர், கல்லறையிலிருந்து வந்த போது, ஆஹா என் ஆண்டவர், வாக்களித்தபடி எழுந்து விட்டார் என்று ஓடிச் சென்று கட்டிப் பிடித்து ஆரத் தழுவவும், யூத ராஜசிங்கம் கல்லறையிலிருந்து வெளியே வந்து விட்டார் என்று ஆனந்தமாய் ஆர்ப்பரிக்கவும், தோள்களின் மீது சுமந்து கொண்டு எருசலேமின் வீதிகளில் ஓசன்னா சொல்லி அழைத்துச் செல்லவும் அங்கே ஒருவரும் இல்லை. அவர்

எழுந்திருக்கும் போது, கல்லறையினிடத்தில் ஆள் எதற்கு என்ற ஒரு கேள்வியை நீங்கள் இங்கே கேட்கலாம். ஆனால், சீடர்களுக்கு அவர் என்னவெல்லாம் சொன்னார், எப்படியெல்லாம் போதித்தார் என்பதை நீங்கள் அப்படியே படித்துப் பார்ப்பீர்களானால், அவருடைய சீடர்கள் கல்லறையினருகே காத்திருந்திருக்க வேண்டும் என்பதை நீங்களே ஒருவாறு ஒத்துக் கொள்வீர்கள்.

மத். 16 : 21, "அது முதல் இயேசு, தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, **மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதை தம்முடைய சீடர்களுக்கு சொல்லத் தொடங்கினார்** என்றுள்ளது. "**அதுமுதல்**" என்பதை நாம் உன்னிப்பாக கவனிக்கவேண்டும். ஏனெனில், தான் **மூன்றாம் நாளில் எழுந்திருப்பேன்** என்பதை இவர் சீடர்களுக்குப் **பலமுறை** சொல்லியிருக்கிறார். அடுத்த அதிகாரத்தின் 23ம் வசனத்தைப் பாருங்களேன். "அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் **நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார்** என்றார்" இன்னும் மூன்று அதிகாரங்கள் கழித்து, "..... ஆகிலும் **மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்** என்றார்". தான் மூன்றாம் நாளில் உயிரோடே எழுந்திருப்பேன் என்பதைத் தன்னுடைய சீடர்களிடம் தெளிவாகவும், தீர்க்கமாகவும் **தொடர்ந்து சொல்லி வந்தும் கூட,** ஒருவர் கூட அங்கே இல்லை. ஏன் இப்படிச் செய்தார்கள் என்று எனக்கும் விளங்கவில்லை. ஆனால், தன்னால் நேசிக்கப்பட்டு, போஷிக்கப்பட்டு, போதிக்கப்பட்ட சீடர்கள், தான் சொன்னதைக் குறித்துக் கவலைப்படாமல், அதைக் குறித்த எண்ணமற்றவர்களாயிருந்தது எவ்வளவு ஏமாற்றத்தை அந்நாளில் தந்திருக்கும் என அப்படியே எண்ணிப் பாருங்கள்.

ஒரு வேளை இயேசுவானவர் சொன்னதை சீடர்கள் புரிந்து கொள்ள முடியாமல் போயிருக்க வாய்ப்புண்டு என்று சொல்லி அவர்களுக்காக வக்காலத்து வாங்கலாம் என எண்ணினால், அதற்கும் வழியில்லாமல் இருக்கிறது. எப்படியெனில், **அவர் சொன்னபடி நடக்கும்** என்பதை, **அவருடைய எதிரிகள்** கனகச்சிதமாகப் புரிந்து செயல்பட்டிருக்கிறார்கள். ".... **பிரதான ஆசாரியரும், பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து,** ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும் போது, **மூன்று நாளைக்குப் பின் எழுந்திருப்பேன்** என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது" என்று கூறியுள்ளனர். (மத். 27; 63). ஏதோ ஒருமுறை கேட்டதை அவர்கள் நினைவில் வைத்து அதற்கேற்றபடி காரியமாற்றியிருக்கும் போது, அடிக்கடி அவர் சொன்னதைக் கேட்ட இவர்களுக்கு எப்படி ஞாபகம் இல்லாமல் போயிற்று? அவரின் வார்த்தைகளை இவர்கள் எப்படி மறக்கலாம்? அவரைப் பற்றி பழைய பிரமாணங்களில் சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் ஒவ்வொன்றும்

அப்படியே நிறைவேறுவதைக் கூட இருந்து கண்டவர்கள், தீர்க்கதரிசனங்களின் சிகரமாக இருக்கும் உயிர்த்தெழுதலைக் காண எவ்வளவு ஆவலாகக் காத்திருக்க வேண்டும் தெரியுமா? அப்படி அவர்கள் செய்திருக்க வேண்டுமா? வேண்டாமா? சொல்லுங்கள்!

ஒருவரும் இல்லையென்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்? இரண்டு மரியாள்கள் அங்கே போகவில்லையா என்று ஒருவேளை நீங்கள் கேட்கலாம் (மத். 28 ; 1) உண்மை தான். அவர்கள் போன நோக்கம் என்ன? **சுகந்த வர்க்கமிடும்படி** கல்லறைக்குப் போனார்கள். போனவர்கள், "கல்லறையின் வாசலிலிருக்கும் கல்லை, நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள் (மாற்கு. 16 : 1 - 3) இதிலிருந்து என்ன தெரிகிறது? மரித்த இயேசுவுக்காகத்தான் சென்றார்களே ஒழிய, உயிர்த்தெழும் இயேசுவைக் காண அல்ல. போதுமா?

ஊழியத்தின் நாட்களிலே ஏற்பட்ட ஏமாற்றம், உயிர்த்த நாளிலும் விடவில்லை என்ற கசப்பான உண்மையைத் தெரிந்த கையோடு மேலும் தொடருங்கள்.

## III வருகையின் நாளிலும் ஏமாற்றம் இருக்கப் போகிறதா?

தன்னுடைய ஊழியத்தின் நாட்களில் ஏமாற்றமடைந்த இயேசுவானவர், உயிர்த்தெழுந்த நாளிலும் ஏமாற்றமடைந்திருக்க வாய்ப்புண்டு என்று பார்த்தோம். இந்த இயேசுவானவர், மீண்டும் நியாயாதிபதியாய் வரும் போது, அவர் இன்னுமொருமுறை ஏமாற்றத்தைச் சந்திக்காமல், பார்த்துக் கொள்வது அவருக்குப் பிரியமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லுகிறவர்களின் கடமையாயிருக்கிறது. ஒருவேளை அவர் வரும் போது, அவருடைய உபதேசத்தின்படி வாழ்கிறோம் என்பவர்கள் அவரின் வருகைக்காகக் காத்திராமல் இருந்தால், நிலைமை எப்படியிருக்குமென்று தயவாய் எண்ணிப் பாருங்கள்!

கல்லறையிலிருந்து மூன்றாம் நாளில் எழுந்திருப்பேன் என்று சொல்லி அதன்படி உயிர்த்த அதே இயேசுவானவர் மீண்டு வந்ததோடு, மீண்டும் வருகிறேன் என்றும் சொல்லியுள்ளார். "**...... நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்**" (யோவான் 14 : 3) என்று வாக்களித்துள்ளார். மேலும், இயேசுவானவர் பரமேறிச் சென்ற போது, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர், "கலிலேயராகிய மனுஷரே, ........ **இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மீண்டும் வருவார் என்றார்கள்**", (அப் .1:11) இன்னும், அப்போஸ்தலன் பவுல் தெசலோனிக்கேயருக்குச் சொல்லும் போது "ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் **வானத்திலிருந்து இறங்கி வருவார்**" (1. தெச. 4 ; 16) என்று கூறியுள்ளார்.

மேற்சொன்ன இந்த வசனங்கள் எல்லாம் அவருடைய வருகை நிச்சயம் என்று சொல்லுகிறது. **சொன்னபடி எப்படி எழுந்தாரோ, அதே போல வாக்களித்தபடி திரும்பவும் வரப் போகிறார்.** எந்த சந்தேகமுமில்லை, அவருடைய வருகையைக் குறித்து 300க்கும் அதிகமான புதிய ஏற்பாட்டு வசனங்கள் நேரிடையாகவோ, மறைபொருளாகவோ எடுத்துச் சொல்லுகிறது. இப்படிப்பட்ட மகத்தான நாளுக்காக நாம் விழித்திருக்க வேண்டுமென்று, இயேசுவானவர் திரும்பத் திரும்பச் சொல்லியுள்ளார்". உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் **விழித்திருங்கள்**" (மத். 24; 42) என்று. "மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் **விழித்திருங்கள்**" என்றும் கூறியுள்ளார். (25; 13). ஆகவே, அவருடைய வருகைக்காக, தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் விழிப்புடன் காத்திருக்க வேண்டியது அவசியம். அதுவும் எப்படி? ரோமருக்கும், கொரிந்தியருக்கும் பவுலடியார் எழுதும் போது, **பொறுமையோடே காத்திருக்க வேண்டுமென்றும்** (ரோமர். 8 ; 25). **ஆவலோடே காத்திருக்க வேண்டும்** என்றும் சொல்லியுள்ளார். (1. கொரி 1 ; 7)

அப்படியானால், அருமையானவர்களே, கிறிஸ்துவின் வருகைக்காக, நாம் ஆவலோடே காத்திருக்கிறோமா? அந்த நாள் எதிர்பார்க்கப்படும் ஒரு நாளாக நமக்கு இருக்கிறதா? அந்த நாள் எப்பொழுது இருக்குமென்று திட்டமாகத் தெரியாதபடியால், வேதம் அந்த நாளையும், நேரத்தையும் குறித்து வெளிப்படுத்தாதபடியால் (மாற்கு 13 : 32) **நாம் ஒவ்வொரு நாளிலும்,** ஆயத்தமாகவும், எதிர்பார்க்குதலோடும் இருக்க வேண்டுவது அவசியம். ஆனால், கேள்வியென்னவெனில், நாம் அப்படியிருக்கிறோமா என்பதுதான். ஒருவேளை, அவருக்காக நாம் ஆவலோடே காத்திருக்கிறவர்களாக இல்லையெனில், அவருடைய ஊழியத்தின் நாட்களிலும், அவர் உயிர்த்த நாளிலும் அவரைப் பின்பற்றினவர்கள் செய்த **அதே தவறை** நாமும் செய்கிறவர்களாக இருப்போம். அதாவது, கிறிஸ்துவை அந்த மகா நாளிலே, நாம் ஏமாற்றத்திற்கு உட்படுத்துகிறவர்களாய் இருப்போம்.

இங்கே ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள். இயேசுவை, அவருடைய ஊழியத்தின் நாட்களிலும், உயிர்த்தெழுந்த நாளிலும் ஏமாற்றத்திற்குள்ளாக்கினவர்களுக்கும், வருகையின் நாளிலே ஏமாற்றத்திற்கு உட்படுத்துகிறவர்களுக்கும் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. ஆம், அவர்கள் தங்கள் செய்கையிலிருந்து திருந்துவதற்கும், அவருக்குப் பிரியமானதொரு வாழ்க்கையை நடத்துவதற்கும் வாய்ப்பு கிட்டியது. பெந்தெகொஸ்தே நாளிலும், அதைத் தொடர்ந்தும், கண்ணீர் விடப்பட்ட எருசலேம் நகரிலிருந்து பல ஆயிரம் பேர் இரட்சிப்படைந்து தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை நடத்தியுள்ளனர். அவருடைய சீடர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் எப்படி வாழ்ந்தனர் என்பதைச் சொல்லவே தேவையில்லை. நமக்குத் தெரியும்

தானே! ஆனால், வருகையின் நாளில் அவரை ஏமாற்றத்திற்குள்ளாக்கு கிறவர்களுக்கு **மறுவாய்ப்பு** என்பதே இல்லை. “**அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்**” என்பதைத் தவிர, அவர் வேறொன்றும் பேசமாட்டார். அப்படியானால், நாம் அவருடைய வருகைக்காக எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்பது விளங்குகிறதா? இல்லையா?

வருகையின் நாளில் நம்மால் அவர் ஏமாற்றமடையாமல் இருப்பதற்கான ஒரே வழி, **பிதாவானவர் தன் குமாரனைக் கொண்டு வகுத்துக் கொடுத்திருக்கிற இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிவதாகும்.** மனிதர்கள் ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு அதைச் செய்தால் போதும், இதைச் செய்தால் போதும், அப்படி இருந்தால் போதும், இப்படி இருந்தால் போதும் என்று ஆயிரம் வழிகளைச் சொல்லலாம் அல்லது காட்டலாம். ஆனால், நம்மை அந்த மகா நாளில் அவருடைய வார்த்தைகள் தான் நியாயந்தீர்க்கப் போகிறபடியால் (யோவா. 12 : 48) ஜீவனுள்ள அவ்வார்த்தைகள் என்ன சொல்லுகிறதென்பதே முக்கியம். ஆகவே அவ்வார்த்தைகளைக் கவனியுங்கள். “விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று கூறுகிறது (மாற்கு. 16;16) இவ்வசனம் **இரட்சிப்புக்கு விசுவாசம் தேவை** என்று கூறுகிறத. அடுத்து, தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிதற்கு இடமில்லாமல், இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது (2.கொரி.7 ; 10). இரட்சிப்புக்கு மனந்திரும்புதல் அவசியம் என்று இங்கே காண்கிறோம். அடுத்து இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும். என்றுள்ளது (ரோமர்.10:1) **இங்கே இரட்சிப்புக்கு, இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்ய வேண்டும் என்பதை அறிகிறோம்.** மேலும், அப். 2 ; 38ல் “பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்” என்று காண்கிறோம். இதன் மூலம் “இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் இன்றியமையாதது” என்றும் தெரிகிறது.

ஆகையால், ஒருவன் சத்தியத்தின்படி இரட்சிப்படைய விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கை, தண்ணீரில் மூழ்கி பாவமன்னிப்புக்காகப் பெறும் ஞானஸ்நானம் ஆகிய அனைத்தும் அவசியம். இவைகளின் படி நாம் செய்திருந்தால் மாத்திரமே வருகையின் நாளிலே, அவரை நாம் ஏமாற்றத்திற்குள்ளாக்காதவர்களாக இருக்கமுடியும். மற்றபடி நம்முடைய விசுவாசம் விருதா. ஆகையால், கிறிஸ்துவையும், அவருடைய உபதேசத்தையும் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு, இறுதி நாளில் அவரை ஏமாற்றத்திற்குள்ளாக்கி, நித்திய அழிவுக்கு பாத்திரராகிவிடாதபடி, அவருடைய உபதேசத்தின்படி, இரட்சிப்படைந்து, அவருக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தையும் பெற்று கிறிஸ்துவுக்குள் பெருவாழ்வு வாழ்வோமாக! ஆமென்.

**செ. இராஜநாயகம்.**

# சுவிசேஷத்தை கேள்விபடுதல்

ஒருவன் எதை நம்புகிறான் என்பது அவன் எதை கேட்கிறான் என்பதை வைத்துத்தான் தீர்மானிக்கப்படும். ஒருவன் தவறான உபதேசத்தை கேட்கும்போது, அதை நம்புவதற்குத்தான் அதிக வாய்ப்பிருக்கிறது. அதுவும் அவன் கேட்பதை வேதத்தோடு ஒப்பிட்டுப்பாராமல், சத்தியத்தை அறிய அதிக முயற்சி எடுக்காத போது அவன் தவறான உபதேசத்தை தான் நம்புவான் என்பதில் சந்தேகமே இல்லை. அவன் சத்தியத்தை கேள்விப்பட்டால், அதை நம்புவதற்கு அதிக வாய்ப்பிருக்கிறது. ஆகவே தான் தூய்மையான தேவனுடைய வார்த்தைகளை ஒருவன் கேட்க வேண்டும் என்பது முக்கியமானதாக இருக்கிறது. பவுல் கூறும் போது, ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேயே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும்" (ரோமர்10:17) "கேள்விப்படுதல் மிகவும் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டிருப்பதை நாம் கவனிக்கவேண்டும். எதையோ கேள்விப்படுதல் என்று இங்கு சொல்லப்படாமல் தேவனுடைய திருவசனத்தை கேள்விப்பட வேண்டும் என்று சொல்லி இருப்பதை நாம் இன்னும் அதிகமாக கவனிக்க வேண்டும்.

ஒருவனது விசுவாசம் தேவனுடைய வார்த்தையின் மேல் தான் அமைந்திருக்கிறது என்பதை எப்படி உறுதி செய்வது என்ற கேள்வி எழவே செய்கிறது. தேவ நாமத்தால் இன்று அநேக காரியங்கள் சொல்லப்படுகிறது. வேதாகமத்தின் பக்கங்களிலிருந்துதான் இது சொல்லப்படுகிறது என்ற செய்திகளும் இன்றைக்கு அதிகமுண்டு. ஆனால் அப்படி சொல்லப்படுபவைகளில் அநேக காரியங்கள் முரண்படுகிறது. ஆகவே, பிரிவினைகளும், குழப்பங்களும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஒருவன் சத்தியத்தை கேட்கிறான் என்று எப்படி உறுதி செய்வது அதற்கு சிறந்த வழி நாம் வேதத்திற்கு செல்வதுதான். நாம் ஒருவர் மீது எவ்வளவு அன்பும் மரியாதையும் வைத்திருந்தாலும், அவர் போதிப்பதையோ அல்லது பிரசிங்கிப்பதையோ நாம் இறுதியானது என்று நினைத்து விடக் கூடாது.

நமது ஆத்துமா மிகவும் விலையேறப் பெற்றதாகவும் நித்தியம் என்பது நீண்டதொரு காலத்தை கொண்டதாகவும் இருப்பதால், நமது விசுவாசத்தையும், இரட்சிப்பையும் மனிதர்களின் வார்த்தையின் மேல் கட்டக் கூடாது.

மாறாக, நாம் சத்தியத்தினிடத்திற்கு செல்ல வேண்டும், அதாவது வேதத்திற்கு செல்ல வேண்டும், நாம் அதை வாசித்து தியானித்து, நாம் சரியான பாதையில்

போகிறோமா என்பதை உறுதி செய்ய வேண்டும். அப்படி நாம் சரியான வழியில் செல்லவில்லை என்றால் சரி செய்து கொள்ள வேண்டும்.

கிறிஸ்து சொல்லும் போது, "வேதவாக்கிங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னை குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவான் 5 : 39) நாம் பெரேயா பட்டணத்தாரைப் பற்றி வாசிக்கிறோம் "அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" (அப் 17 : 11) **இவைகளை நினைத்துப் பாருங்கள். பவுல் பிரசங்கித்த பின்னும் தங்கள் செய்தது சரியானது தான் என்பதை உறுதி செய்யும் படியாக வேதத்தை ஆராய்ந்த ஜனங்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம் பவுல் காலத்து மக்களே; அப்படி செய்தால், நாம் நவீன பிரசங்கியார்களை கேட்ட பின்னர் இன்னும் அதிகமாக அல்லவா அப்படி செய்ய வேண்டும். இதை எல்லாரும் செய்தால் எவ்வளவு அருமையானதா இருக்கும்? இப்படி நடக்குமானால், மார்க்கரீதியான தவறுகள் நடப்பது குறைக்கப்படும்! கள்ளப்போதகர்களும் குறைந்து விட்டார்கள்.**

இளம் பிரசங்கியராகிய தீமோத்தேயுவை பவுல் தேவ வார்த்தைகளை படிக்கும்படியாக ஊக்கப்படுத்தினார். அவர் சொல்வதை கேளுங்கள். "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் படுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. (2 தீமோ. 2 : 15)" ஏன் இத்தனை நபர்கள் தேவ வார்த்தைகளை அறியாது இருக்கிறார்கள்? அவர்கள் சத்தியத்தை சரியாக படிப்பதில்லை. அது மாத்திரமல்ல, சரியானது எது, தவறானது எது? என்பதை நிதானித்து அவர்கள் படிப்பதில்லை. ஏன் மோசேயின் பிரமாணத்திற்கும், கிறிஸ்துவின் பிரமாணத்திற்கும் உள்ள வேறுபாட்டை ஏன் சிலரால் புரிந்து கொள்ள முடியவில்லை? பிரச்சனை என்று தான் அவர்கள் வேதத்தை படிக்கவில்லை. ஆகவே அதை பிரித்து பகுத்துப் பார்க்க முடியவில்லை. என் நண்பர்களே! அப்போஸ்தலன் பவுல் ஒரு இளம் பிரசங்கியாருக்கு வேதத்தை தியானிக்க வேண்டும் என்று புத்தி சொன்னால், நாம் அதை பின்பற்ற வேண்டுமல்லவா?

யோவான் தன் காலத்து கிறிஸ்தவர்கள் ஊக்கப்படுத்தும் போது, "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கத்தரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் (I யோவா 4 : 1)" என்கிறார். அநேக கள்ள தீர்க்கதரிசிகள் உலகத்தில் இருப்பதால் அவர்கள்

எல்லோரையும் நம்ப வேண்டாம் என்று யோவான் கூறுகிறார். நாம் அவர்களை சோதிக்க வேண்டும் என்று ஆலோசனையைத் தருகிறார். அதை நாம் எப்படி செய்ய முடியும்? அவர்கள் சொல்வதையும் தேவன் தனது வேதத்தில் சொல்வதையும் நாம் ஒப்பிட்டுப் பார்ப்பதின் மூலம் நாம் அதை செய்யலாம். நாம் இதை செய்வோமானால் யார் சத்தியத்தைப் போதிப்பது, யார் அப்படி போதிப்பதில்லை என்பதை அறிந்து கொள்ள முடியும்.

பிலிப்பு எத்தியோப்பிய மந்திரியிடம் இரதத்திலே சேர்ந்தபொழுது அவன் வேதத்தை படித்துக் கொண்டிருப்பதைக் கண்டான், வேதம் சொல்கிறது. "அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து, அவனுக்குப் பிரசங்கித்தான்" (அப் 8 : 31) அதின் விளைவாக அவன் இருதயத்தில் உண்மையான விசுவாசம் உருவானது. அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தான். அப் 8 : 5ல் பிலிப்பு சமாரியாவில் கிறிஸ்துவை பிரசங்கித்தான் என்று வசனம் சொல்கிறது. அதன் பின்பு பேதுருவும், யோவானும் சமாரியவுக்குச் சென்று அங்கு கர்த்தரின் வார்த்தையை பிரசங்கித்து எருசலேமுக்குத் திரும்பினார்கள். (அப். 8 : 25) என்று காண்கிறோம். அவர்களின் பிரசங்கத்தின் மையக் கருத்து கிறிஸ்துவும், தேவனுடைய வார்த்தையுமாகவே இருந்தது.

நாம் சுவிசேஷத்தை கேள்விப்பட இரண்டு வழிகள் உண்டு. நாம் ஏற்கனவே சொன்னது போல, நாமாகவே தேவனுடைய வாக்கியங்களைப் படிக்கலாம். நாம் அப்படி படிக்கிறதினால், கிறிஸ்துவின், பேதுருவின், பவுலின் மற்ற தேவ மனிதர்களின் வேத வார்த்தைகளைப் படிக்க முடியும். இந்த நவீன காலத்திலும், எல்லாராலும் வாசிக்க முடியாது என்பதினால், சிலர் வேதத்தை குறித்து யாராவது பேசக் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இருவர் அதில் ஈடுபடுகிறார்கள், கேட்பவரும் - போதிப்பவரும், தேவ வார்த்தைகளை போதிக்க வேண்டுமென்ற முடிவு எடுப்பவர் மீது அதிக பொறுப்பு சுமரும். அவர் வேதத்திற்கு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும். அவர் தேவனுடைய வார்த்தைகளை சரியாகப் படித்து, தியானித்து, பகுத்துப் போதிக்காவிட்டால் அதன் விளைவை சந்தித்தே ஆக வேண்டும். ரோமாபுரிக்கு பவுல் எழுதுகையில் அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் என்கிறார். (ரோமர் 16 : 17)

கேட்பவருக்கும் பொறுப்புகள் உண்டு, தான் கேட்பது உண்மையானதா? சத்தியம் தானா? என்கிற வினாவைக் கேட்டு அதன் பின்னரே அவர் முடிவுக்கு

வரவேண்டும். தேவனுடைய வார்த்தைகளை தாங்களே வாசிக்க முடிந்தவர்கள், அதை தாங்களே தியானிக்கவும் முடியும். ஆனால், வாசிக்க தெரியாது என்பவர்களின் நிலைதான் மோசமானதாக இருக்கிறது! இப்படிப்பட்டவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் சத்தியத்தை கேட்கிறோம் என்பதை உறுதி செய்ய, தங்களுக்கென்று வேதத்தை யாரையாவது வாசிக்க சொல்ல வேண்டும்.

நமது ஆண்டவர், அப்போஸ்தலர்களை உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் பிரசங்கியுங்கள் என்று சொன்ன சுவிசேஷத்தை ஒருவன் கேள்விபடுவது அவசியம். (மாற்கு. 16 : 15). எல்லா தேசத்தாருக்கும் நம் போதிக்க வேண்டுமென்று வேதம் சொல்கிறது (மத். 28 : 19). ஏன் அப்படிச் சொல்கிறது? மனித குலம், சுவிசேஷத்தை கேட்டு, அதை விசுவாசித்து, அதற்கு கீழ்ப்படிவதினால் இரட்சிக்கப்படவேண்டும் என்பதால் தான் அப்படிச் சொல்கிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகையில், "உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலை கொண்டிரு, இப்படிச் சொல்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்வாய் என்கிறார். (I தீமோ 4 : 16). கேட்பதினால் ஒருவன் எப்படி இரட்சிப்படைய முடியும்? ஏற்கனவே சொன்னது போலவே விசுவாசம் கேள்வியினால் வரும், நாம் அப்படி கேள்விப்படும் பொழுது விசுவாசத்திற்கும், கீழ்படிதலுக்கும் வழிநடத்தும். கீழ்படிதல் இரட்சிப்பை நமக்கு கொண்டு வரும் இதைப்பற்றி தான் பவுல் இங்கு பேசுகிறார்.

அப்போஸ்தல நடபடிகளில் உள்ள மனமாற்ற சம்பவத்தைப் படித்தால் அதில் நீங்கள் ஒவ்வொரு நிகழ்விலும் சுவிசேஷ பிரசங்கியாரைக் காணலாம். அவருடைய வேலை என்ன? இரட்சிக்கப்படுகிறவர்களிடத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். ஆகையால் தான் நாம் படிக்கிற ஒவ்வொரு மனமாற்ற சம்பவத்திலும், சுவிசேஷத்தைக் கேள்விப்பட்ட பின்னரே விசுவாசித்து, கீழ்ப்படிந்து அதன்பின் இரட்சிக்கப்படுவார்கள். உண்மை இப்படியிருக்கையில் சுவிசேஷத்தைக் கேள்விப்படும் வாய்ப்பே இல்லாதவர்களுடைய நிலை என்னவாகும். அவர்களால் இரட்சிப்பை அடைய முடியாது? ஏனென்றால் விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வரும். ஆகவே விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி 11 : 6).


தேவன், தன்னுடைய குமாரன் இயேசுவைக் குறித்து சொல்லும் போது, "மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகை பார்ப்பாய்! (மத். 7 : 5)" தேவன் இன்றைக்கு நம்முடன் தமது குமாரன் இயேசுவின் மூலமாக பேசுகிறார் (எபி 1 : 1, 2) இறுதியாக நாம் கிறிஸ்துவே வார்த்தை என்று

வாசிக்கிறோம் (யோவா 1:1, 2) ஆகவே கிறிஸ்து வசனத்தில் சொல்வதை நாம் கேட்டு, அதற்கு கீழ்ப்படிய வேண்டும். மனிதன் என்ன சொல்கிறான் என்று நாம் பார்க்கக் கூடாது. ஆண்டவர் சொன்னதோடு நாம் பார்க்கையில் மனிதனின் யோசனைகளும், போதனைகளும் வீணானதாக இருக்கிறது. நாம் கிறிஸ்துவை மட்டுமே கேட்க வேண்டும். அவர் மீது நாம் விசுவாசம் வைக்க வேண்டும். அவருக்கு நாம் கீழ்படிய வேண்டும்.

கடைசியாக யாக்கோபு எழுதுகையில் "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களையும் இருங்கள்" (யாக் 1:22)"

நாம் தேவனுடைய வார்த்தை கேட்பது முக்கியமானது. ஆனால் நாம் கேட்டு அத்தோடு நிறுத்தினாலும் நித்தியத்தை இழந்து போவோம். நாம் கீழ்ப்படியாத வரை சத்தியம் நம்மை இரட்சிக்காது. ஆகவே தான் நாம் கேட்கிறவர்களாக மாத்திரமல்ல. அதின்படி செய்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று ஊக்கப்படுத்தப்படுகிறோம். நாம் இதை ஒரு போதும் மறக்கக் கூடாது.

**J.C. CHOATE** **J.C. சோட்**

# பொது இடங்களில், ஒரு ஆண் ஒரு பெண்ணை பேச அழைத்தால்....?

"பெண் விடுதலை" இயக்கங்கள், பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி கொண்டிருக்கும் இந்த காலத்தில், பொது இடங்களில் வெளிப்படையான தலைமைத்துவ பணிகளை செய்யும்படி, பெண்களுக்கு அதிகாரம் கொடுக்கும் முயற்சியாக அநேக காரண காரியங்கள் முன்வைக்கப்படுகிறது.

"உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை...." (I தீமோ. 2 : 12) என்று வேதாகமம் கூறுகிறதை உணர்ந்து கொண்டு, ஒரு கேள்வி கேட்கப்படுகிறது, "மூப்பர்கள் அல்லது சபையின் ஆண் அங்கத்தினர்கள், பெண்களின் மேல் அதிகாரம் செலுத்த முடியும் என்பதால், ஒரு மூப்பர், ஒரு பெண்ணை ஆராதனையில் ஜெபிக்கும்படியாகவோ அல்லது போதிக்கும்படியாகவோ அழைத்தால், அது அனுமதிக்கப்பட கூடியதா? ஏன் என்றால், ஒரு பெண் இப்படி செய்யும் போது மூப்பரின் அதிகாரத்திற்குத் தானே கீழ்ப்படிகிறாள்?"

**விவாதக் கருத்து**

**நம் மத்தியில், அப்போஸ்தலனாகிய பவுல் இன்றைக்கு இருந்து, அவர், "நான் (பரிசுத்த ஆவியின் அதிகாரத்தின்படி) பெண்கள் போதிக்கும்படி அனுமதிப்பதில்லை..." என்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம், அவர் முகத்திற்கு நேராகவே ஒருவன், "ஆனால் நான், அதில் தவறில்லை என்று சொல்கிறேன்!" என்பானனால் அது எப்படியிருக்கும்! இவ்வளவு அகங்காரமான பதிலை சொல்வதற்கு வெறும் மனிதர்களாகிய இவர்கள் யார்?**

இது முறையானது அல்லது ஒழுங்கானது தான் என்பது போல் தோன்றும். ஆண்களே, அவளை ஜெபிக்கும்படி அல்லது போதிக்கும்படி அழைக்கிறபோது, பெண்கள் எப்படி ஆண்களின் அதிகாரத்தை மீறி நடக்க முடியும்? ஆனால் ஒரு முக்கியமான கருத்தை நாம் மறக்கக்கூடாது : "ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான், ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார்" (I. கொரி. 11 : 3) பரிசுத்த ஆவியானவரின் அதிகாரத்தினால் தான் வேதாகமம் எழுதப்பட்டது. மனிதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படவில்லை. சபை கூடி வரும் வேளையில் ஆண்கள் தலைமை ஏற்று நடத்த வேண்டும் என்று எழுதும் போது, பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலால் தான் எழுதப்பட்டதே ஒழிய இவைகள் எழுதியவருடைய கருத்துக்களோ, வார்த்தைகளோ இல்லை.

ஒரு மூப்பரோ அல்லது சபையின் ஆண் அங்கத்தினர்களோ, இரு பாலாரும் கூடியிருக்கும் ஒரு கூட்டத்தில் ஜெபிக்கும்படியோ அல்லது பிரசங்கிக்கும்படியோ ஒரு பெண்ணை அழைத்தால், அவர் வேதாகமத்தின் தெளிவான போதனைக்கு விரோதமாக செயல்படும்படி அவளை கேட்கிறார். ஒரு புருஷனாக, பெண்ணின் மீது அதிகாரம் செலுத்தும்படியான பொறுப்பிலிருந்தாலும், ஆண்டவருக்கு மிஞ்சிய அதிகாரம் இவர்களுக்கு ஒருபோதும் கிடையாது. இப்படிப்பட்ட காரியங்களை செய்யச் சொல்வது கொடிதான அல்லது மிதமிஞ்சிய பாவமாயிருக்கிறது. இது வேதாகமத்தால் மிகக் கடுமையான முறையில் கடிந்து கொள்ளும் மனப்பான்மையாகவுமிருக்கிறது.

இந்த கேள்விக்கு பதில் சொல்லும் இதே போன்ற ஒரு வினா உபாகமப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது. தீர்க்கதரிசியோ அல்லது சொப்பனக்காரனோ (அதிகாரத்தை எடுத்துக் கொள்கிற யாரும்) இஸ்ரவேலரை வழிவிலக்க முயற்சித்து, "அற்புதத்தையும்", ஒரு "அடையாளத்தையும்" நடத்தி வேறே தேவர்களை பின்பற்றுவோம் என்று சொன்னால், "அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப் பீர்களாக.... நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர்

சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக் கொள்வீர்களாக, அந்தத் தீர்க்கதரிசியும், அந்தச் சொப்பனாக்காரனும் கொலை செய்யப்படக்கடவன்; நீங்கள் நடக்கும்படி உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழியை விட்டு உங்களை விலக்கும்படி ........... பேசினான்" (உபா. 13 : 2 - 5)

மோசேயின் கட்டளைக்கு உட்பட்டோ அல்லது தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாதவர்களை கொலை செய்யும் அதிகாரத்தை, தேவனுடைய ஜனங்களே பெற்றிருந்த அந்த ... நாட்களிலோ நாம் வாழவில்லை, ஆனால் தேவன் சொன்னதைக் கேட்டு, அவர் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய முக்கியத்துவத்தை நாம் என்றைக்கும் குறைத்துக் கொள்ளக் கூடாது. நம்முடைய சொந்த எண்ணத்தினால், கர்த்தரின் கட்டளையை மாற்றுவதும், அவர் ஏற்படுத்திய ஒழுங்குமுறையை மாற்றுவதும், ஒருவரின் மிக மோசமான குற்றமாகும். ஒரு கிறிஸ்தவன் இப்படிப்பட்ட பாவம் செய்த குற்றத்தை சுமக்க விரும்பவே கூடாது!

**R.R. நாயகம்** **B.B. சோட்**

## நடப்புச் செய்திகள்

- அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்; எஸ்மா அவசர சட்டம் பாய்ந்தது.
- வேலை நிறுத்தம் குறித்தான வழக்கின் மீது நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு கண்டு அரசு ஊழியர்கள் அதிர்ச்சி.
- ஒட்டிப் பிறந்த ஈரானிய இரட்டையர்களை பிரிக்கும் படி நடத்தப்பட்ட அறுவை சிகிச்சையின் போது அதிக இரத்தம் வெளியேறியதால் மரணம்.
- இந்தியாவின் தலைநகர் டெல்லியிலிருந்து, பாகிஸ்தானில் உள்ள லாகூருக்கு பஸ் போக்குவரத்து மீண்டும் தொடர்ந்தது.
- லண்டனில் நடந்த விம்பிள்டன் டென்னிஸ் ஒற்றையர் ஆட்டத்தின் ஜூனியர் பிரிவில் இந்திய வீராங்கனை வெற்றி வாகை சூடினார்.

# என் பிராணனையும்...

விண்ணகத் தந்தைக்கு நேசமிகு சுதனாக, பரலோகத்திலிருந்த இறைமகன் இயேசு, நரருலக மனிதர்கள் நித்திய நரகத்திற்கு போகக் கூடாது என்ற சீரிய எண்ணத்துடன், மண்ணுலகில் உதித்து, தன் பிராணனையும் நமக்காக கொடுத்தார். அந்த அன்பு தெய்வத்தின், அருட்சுனையான நாமத்தினால், வாலிபர்களாகிய உங்களை வாழ்வாங்கு வாழும்படி வாழ்த்துகிறேன். இம்மாத தலைப்பில் ஒரு ஏக்கத்தின் குரல் தொனிப்பதை காண்கிறீர்கள். "என் பிராணனையும்" என்று ஏக்கப் பெரு மூச்சுடன் சொல்லுவதை கேட்கும்போதே, இதைக் கூறுபவர் தனக்கு உண்டான அல்லது தான் நம்பியிருந்த அல்லது தனக்கு ஆதரவாக இருந்த அனைத்தையும் இழந்து "தனியே" நிர்க்கதியாய் நிற்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

சிருஷ்டிப்பின் நாள் தொடங்கி மனித குலம் சந்திக்கும் தணியாத ஒரு பிரச்சினையாக "தனிமை" இருக்கிறது. மனிதன் தனியே இருப்பது நல்லதல்ல என்று நம்மை உண்டாக்கிய சர்வ ஞானம் படைத்த சிருஷ்டிகர்த்தரே மொழிவதை நாம் பார்க்கிறோம் (ஆதி.2 : 18). அந்த சர்வ ஞானியாகிய தேவனிடம் ஞான விண்ணப்பம் செய்த சாலொமோன் ஞானி, "பிரிந்து போகிறவன் தன் இச்சையின்படி செய்யப் பார்க்கிறான்..." (நீதி. 18 : 1) என்று யாத்துக் கொடுத்திருக்கிறார். தமிழில் "பிரிந்து போகிறவன்" என்ற வார்த்தைக்கு, ஆங்கிலத்தில் "தனித்துப் போகிறவன்" (A man who isolates himself) என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஞானி சொல்லும் போது, தனிமையோடு இச்சையைத்தான் சம்பந்தப்படுத்திக் கூறுகிறார்.

## பர்வதத்திலே பயப்படாமலிருந்தான்

"உண்மைக்கும்", "பொய்க்கும்", போராட்டம், ஒன்றான மெய் தேவனுக்கும் பேசாத ஊமைத் தெய்வங்களுக்குமிடையே யுத்தம். சொந்த ஜனமாக பிரித்தெடுக்கப்பட்ட இஸ்ரவேல் சோரம் போனது. பிழையின்றி தங்களை நடத்தி வந்த பரம தேவனை விட்டு பாகாலை பின்பற்றினார்கள். எலியா என்னும் எளிமையான தீர்க்கன் இந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஜெகத்தினை படைத்த ஜெய வேந்தனாகிய கர்த்தரே தெய்வம் என்று நிரூபித்து காட்டும்படி தைரியம் கொண்டு அவர்களிடம் அஞ்சாமல் கேள்விக் கணையொன்றை தொடுத்தார். "நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்? கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான்" (1. இராஜா. 18 ; 21).

கர்த்தருக்காக தனியே நின்று போராடுகிறார் நம்மவர் எலியா! அவரே அதை சொல்லுகிறார் பாருங்கள், "கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான்

ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பது பேர்'' என்கிறார். (1. இராஜா. 18 ; 22) அப்படி தனியாளாக இருந்தபோதும் இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து ஒரு சவாலை விடுத்தார், தேவன் உண்மையுள்ளவராக தன்னை நிரூபித்தார். இந்த ஜனங்கள் உடனே "கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்'' என்று முழங்கினார்கள். பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தப்பிப் போகாதபடிக்கு அவர்களை எலியா வெட்டிப் போட்டான். எலியாவின் திடமனது, கர்மேல் பர்வதத்தின் கொடுமுடியிலும் உயர்ந்ததாக இருப்பதையும், அரி போல் பலம் கொண்ட எலியா வெற்றியின் சிகரத்தில் சிரித்துக் கொண்டே ஏறுவதையும் நாம் காண்கிறோம்.

மூன்று வருஷமாக இஸ்ரவேல் தேசத்தில் மழையில்லை, கீசோன் ஆற்றங்கரையின் ஓரத்திலே, எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை வெட்டியதால் இரத்த ஆறு ஓடியிருக்கும், துன்மார்க்கரின் குருதி சிந்தப்பட்ட பின் மழையின் இரைச்சலை எலியா கேட்டு கர்த்தரைப் பணிந்து, தன் முகம் முழங்கால் மட்டும் பட குனிந்து விண்ணப்பிக்கிறான். அவன் சொன்னபடியே கார்மேகம் கூடி கடுமழை பொழிந்தது. ஆகாப் ராஜா இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்குப் போனான். இப்பொழுது தான் வாலிபர்களே! நாம் கவனிக்க வேண்டும், "கர்த்தருடைய கை எலியாவின் மேல் இருந்ததினால், அவன் தன் அறையைக் கட்டிக் கொண்டு, யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்கு முன் ஓடினான்'' (1. இராஜா. 18 ; 46) என்று வேதம் சொல்லுகிறது.

எலியாவின் மேல் கர்த்தருடைய வலதுகரமிருந்து பராக்கிரமத்தை தந்தது, வெற்றியின் சிகரத்தைக் கண்ட எலியா, இப்பொழுது யெஸ்ரேயலைச் சென்றடைவதில் வெற்றி ஓட்டம் ஓடி முடிக்கிறான், தேசத்தின் முடியையே ஜெயிக்கிறான். இந்த வெற்றிக் களிப்பிலிருந்த எலியாவுக்கு வாய்மொழி ஓலையொன்று வருகின்றது. "பழிக்குப்பழி'' – நீ செய்தது போலவே உனக்கும் செய்யப்படும் நாளை இந்நேரம் உன் உடலில் உயிரிராது, உன் நாசியிலே சுவாசமிராது'' என்று சவால் விடப்படுகிறது. ஆகாப் அரசனின் துணைவியிடமிருந்து, ஆகாமியத்தின் ஆணவ அரசி யேசபேலிடமிருந்து வந்த சவாலை, சர்வவல்ல தேவனின் தீர்க்கதரிசி சந்திப்பான் என்று நீங்கள் எதிர்பார்த்துச் சிந்திப்பீர்களானால் நம் சிந்தனையில் பழுதொன்றுமில்லை.

இந்த கொக்கரிப்பு எலியாவின் செவியில் விழுந்தது, எழுந்து போராட வேண்டிய எலியா, தன் ஜீவனைக் காக்க ஓடுகிறான், சுமார் நூறு மைல்களைக் கடந்து பெயெர்செபாவுக்கு வந்து, அங்கு வனாந்திரத்திலே ஒரு நாள் பிரயாணமாய் போய், ஒரு "சூரைச் செடியின்'' கீழ் உட்கார்ந்தான். வெற்றியின் உச்சாணிக் கொம்பிலே இருந்தவன், பொய்க்கு எதிராக நெஞ்சுரத்துடன் போராடினவன், கர்மேல் பர்வதத்தின் உச்சியில் கர்த்தரே தெய்வமென்று நிரூபித்தவன், அதிகாரம் நிறைந்த அகங்கார அரசியிடமிருந்து வந்த அச்சுறுத்தலுக்குப் பயந்து சூரைச் செடியின் கீழ் இருக்கிறான். ஐயகோ! என்ன ஒரு பரிதாபம்!

எலியாவுக்கு ஏன் இந்த கீழ் நிலை?. கர்த்தரின் கை தன்மேல் இருந்ததினால் ஆகாப் என்னும் கொற்றவனின் இரதத்தைக் காட்டிலும் அதி வேகமாக ஓடியதை ஏன் மறந்தான்? தேவ அக்கினி, தண்ணீரை, கல்லை, மண்ணை பட்சிக்கும் வல்லமையுடையதென்று கண்டவன், இப்பொழுதோ, கண்டதை வணங்குகிற பேலியாளின் மகள் யேசபேலுக்குப் பயந்து வனாந்திரத்திற்கு ஓடிவந்தது ஏன்? இந்த கேள்வியை தேவனே எலியாவிடம் கேட்டார், அதற்கு எலியா தந்த பதிலைப் பாருங்கள், "கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்க தரிசிகளைப் பட்டயத்தினால் கொன்று போட்டார்கள். **நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்.**

வெற்றியின் சிகரத்தில் தேவனோடு இருந்த இவன்; இப்பொழுது தனிமை என்னும் பாதாளத்தில் விழுந்து விட்டான். ஒரு நேரப் போஜனத்தின் பெலத்தைக் கொண்டு நாற்பது நாள் இரவு பகலாக ஓரேப் என்னும் தேவ பர்வதம் மட்டும் நடந்தே போயிருக்கிறான் என்றால் அவன் தனித்துவிடப்பட்டதை எவ்வளவாக உணர்ந்திருப்பான் என்று யூகித்துக் கொள்ளுங்கள். சென்ற மாதம் நாம் படித்த எரேமியாவும் அந்தத் துரவிலே தனியாக எப்படி தவித்தாரோ? சிங்கக் கெபியில் தனியாக இருந்த தானியேல் எப்படி அந்த இரவைக் கழித்தாரோ? சகோதர சதியினால் தண்ணீரற்ற குழியில் விழுந்த யோசேப்பு எப்படியெல்லாம் ஏங்கினாரோ? இந்த தனிமை ஒருவனை எப்படி கலங்கடிக்கிறதென்று பாருங்கள் வாலிபர்களே!

நமதாண்டவரும் இந்த தனிமையின் அகோரத்தை அனுபவித்திருக்கிறார். தன் ஊழியப் பாதையின் இறுதி மணித் துளிகள். செங்குருதியை சிந்த ஆரம்பித்த கெத்செமனே தோட்டத்தில் இயேசு தன் சீடர்களிடம் தன்னோடு ஒரு மணி நேரம் விழித்திருங்கள் என்று கேட்டார். **ஆனால் இவர்களோ நித்திரை மயக்கம் கொண்டு இத்தரையில் விழுந்து ஜெபித்த நமதாண்டவரை தனியே விட்டுத் தூங்கினார்கள்.** அவர்கள் இப்படிச் செய்வதைக் கண்ட அவர், நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதா? என்று நெஞ்சுநோகக் கேட்டாரே, அப்பொழுது எப்படியாகத் தவித்தாரோ தெரியவில்லை? இத்தனைக்கும், இவர்கள் தன்னைத் தனியே விடும் காலம் வரும் என்று அறிந்திருந்தார் நமது இரட்சகர். பிதா தன்னோடு இருப்பதையும் உணர்ந்தேயிருந்தார் (யோவான்.16 ; 32) ஆனால், அவரையும் இந்தத் தனிமையின் கொடுமை விட்டு வைக்கவில்லை.

பகைவர்களின் கைகளில் இயேசு பிடிபட்ட போதோ எல்லாரும் அவரை விட்டு ஓடியே போனார்கள் (மத். 26; 56) குற்றம் எதுவும் புரியாத விண்ணகக் கோமகன் கைதியாக தனியே சென்ற போது எப்படி உணர்ந்தாரோ? அப்போஸ்தலன் பவுலைப் பாருங்கள். அவரும் இந்த தனிமையை

உணர்ந்தவராக, ரோம சிறையில் தவித்த போது நடந்ததைக் கூறுகிறார். "நான் முதல் விசை உத்தரவு சொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடே கூட இருக்கவில்லை. எல்லாரும் என்னை கைவிட்டார்கள் என்கிறார்" (2. தீமோ. 4 ; 16), எனக்கன்பான வாலிபனே, நீ கூட இப்படி எலியாவைப் போல், தானியேலைப் போல், நமது ஆண்டவரைப் போல், பவுலைப் போல் தனிமையிலிருந்து தவிக்கிறாயோ?

வாலிபர்களே! நமதாண்டவர் சொன்னதுபோல, நாம் தேவனுக்கு உண்மையுள்ளவராக அவர் சித்தம் செய்தால் நாம் தனியே இருப்பதில்லை, பிதா இயேசுவோடு இருந்ததுபோல நம்மோடுமிருப்பார். அப்போஸ்தலன் பவுலைப் பாருங்கள் எத்தனை தனிமையிலிருந்தார் என்று, "**சூரைச் செடியின் நிலை**" **அவருக்கும் வரவே செய்தது ஆனால் அவர் சொல்வதை கவனியுங்கள், "கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று.... என்னைப் பலப்படுத்தினார்...**" (2. தீமோ. 4 : 17) என்கிறார். பவுலைப் போல நாம் கிறிஸ்துவைப் பின்பற்றினால் (1.கொரி.11:1) பவுலோடு இருந்த தேவன் நம்மோடும் இருப்பார். எலியாவுக்கு மெல்லிய சத்தத்தினாலே பேசின தேவன் இன்றும் நம்மோடிருந்து வசனத்தின் மூலம் பேசுவார். தனிமையின் கண்ணீரைத் துடைப்பார். ஆகவே நாம் பவுலைப் போல **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு** என்று தைரியமாகச் சொல்லுவோம் (பிலி. 4 ; 13) "**தனிமையை வெல்வோம்**" தேவ ஆசீர்வாதம் பெறுவோம். ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்.**


கரண்டி.வி.யில்

**திருமறை தியானம்** **தொலைக்காட்சி நிகழ்ச்சி**

*திருமறை ஆசான் இதழின் ஆசிரியர்*
*திருமறை தியான நிகழ்ச்சியில்*
*நற்செய்திப் பேருரை ஆற்றுகிறார்.*

நாள் : **பிரதி ஞாயிறு**

நேரம் : **மதியம் 1.00 முதல் 1.30 வரை**

**(கோவை, திருப்பூர், ஈரோடு பட்டணங்களில் மட்டும்)**

கண்டு, கேட்டு தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்.

# தீமோத்தேயுவும், அவன் பாட்டியும் தாயும்

**சி**றுபிள்ளைகளே உங்களை மீண்டும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சென்ற மாதத்தின் பாடம் நன்றாக இருந்திருக்கும் என நம்புகிறேன். சரி, இந்த மாதமும் ஒரு சிறந்த பாடத்தை உங்களுக்கு அளிக்கிறேன். இது ஒரு வாலிபனை பற்றியதான பாடம், வாலிபத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நமக்கு வாலிபனைப் பற்றிய பாடம் பிரயோஜனமாய் இருக்கும். யார் அந்த வாலிபன் என்பதை தொடர்ந்து படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு நெருக்கமாக இருந்த தீமோத் தேயுவை பற்றி புதிய ஏற்பாடு நமக்கு சொல்லுகிறது. அவன் வேதாகமத் தில் முதன் முதலாக அப். 16: 1-3-ல் காணப் படுகிறான். அங்கே அவனைப் பற்றி என்ன கூறுகிறது தெரியுமா? நற்சாட்சி பெற்றவனாகயிருந்தான் என்று கூறுகிறது. அவன் தன் வீட்டை விட்டு பவுலோடு வெகுதூரம் சென்று தானாக பிரசங்கிக்கத் தொடங்கினான்.

'பவுல், தீமோத்தேயுவுக்கு எழுதின கடிதங்களில் (1. தீமோ 2, தீமோ) அவன் பொறுப்புள்ளவனும், கடின உழைப்புள்ளவனும் மென்மையான இருதயமுள்ளவனும், தேவனிடத்தில் அன்பாயிருக்கும் வாலிபன் என்றும் கூறியுள்ளார். இதற்கு எது காரணம் என நினைக்கிறீர்கள்? முதலில், தீமோத்தேயு தன்னைத் தானே உயர்த்தி சிறந்தவனாக தன்னை கருதவில்லை. பவுல் இப்படிக் கூறுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு? தொடர்ந்து வாசியுங்கள்.

தேவனையும், பழைய ஏற்பாட் டையும் நேசிக்க வேண்டும் என்று அவன் தாயாகிய ஐனிக்கேயாளும் அவன் பாட்டியாகிய லோவிசாளும் அவனுக்கு கற்பித்தார்கள். அவ னுக்கு தேவனுடைய வார்த்தையை இளம் வயதிலேயே கற்பிக்க வேண்டுவது அவசியம் என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். உபா. 6:7-9-ல் யூதர்களுக்கு மோசே கொடுத்த வாக்கின்படி சிறுபிள்ளை களுக்கு தினமும் வேதத்தை கற்பிக்க வேண்டும் என்பதில் விசுவாசமுள்ள வர்களாய் அவர்கள் இருந்தார்கள்.

தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்திலே பவுல் அவன் தாயையும், பாட்டியையும் புகழ்ந்து பேசுகிறார். அவர்களின் விசுவாசத்தையும் அதை தீமோத் தேயுவுக்கு கற்பித்த முறையையும் அவர் (பவுல்) புகழ்கிறார். தீமோத்தேயு வளர்ந்து ஒரு சிறந்த ஊழியனாகவும் சபையில் முன்னோ டியாகவும், பவுலின் நண்பனாகவும் மாறுவான் என்று அவன் தாயும், பாட்டியும் அறிந்தார்களா? இல்லை. ஆனால் அவர்களுக்கு ஒன்று



தெரிந்திருந்தது. அது என்ன தெரியுமா? சிறு வயதில் அவனுக்கு கற்பித்தால் ஒரு நல்ல வாலிபனாக வருவான் என்பதே அது.

தீமோத்தேயுவின் தந்தை கிரேக்க விக்கிரகங்களை வணங்குகிறவர், அது எதை நமக்கு உணர்த்துகிறது? அவர் தேவ பக்தி இல்லாதவர். எபே :6:4ல் உள்ளபடி அவர் தனது பிள்ளையை கர்த்தருக்கு ஏற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்க ஒரு முயற்சியும் செய்ய வில்லை. இப்படி ஒரு கணவனை பெற்றதால் தீமோத்தேயுவின் தாயாகிய ஐனிக்கேயாளுக்கு அவள் செய்யும் வேளை சற்று கடினமாயிருந்திருக்கும் அல்லவா?

தீமோத்தேயுவுக்கு அருமையான தாயும் பாட்டியும் பிறகு பவுல் என்ற சிறந்த நண்பனும் கிடைத்தார்கள். பவுல் அவனை நேசித்து புத்தி சொல்லத் தொடங்கினார். அவன் அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடந்தான். அவர்களின் உபதேசத்தையும் வழியையும் கேட்டு அதின்படி செய்தான். ஏன் தெரியுமா? அவர்களை அவன் நேசித்தான். சரி, இதிலிருந்து நாம் கற்கும் பாடம் என்ன? நாமும் நம்முடைய பெற்றோருக்கும், தாத்தா பாட்டிக்கும் மரியாதை செலுத்த வேண்டும். ஏன்? தேவன் அவர்களை நமக்கு கற்பிக்கவே தந்திருக்கிறார். நாமும் நம்முடைய பங்கை தீமோத்தேயுபோல கீழ்ப்படிந்து நாமும் தீமோத்தேயுவை போல சிறந்த கிறிஸ்தவனாக வர முடியும். அப்படிச் செய்வீர்களா? செய்ய வேண்டும். சரியா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பராக! நாம் அடுத்த மாதம் சந்திப்போம்.

**R. Abel Rodger Nayagam**

# I - தெசலோனிக்கேயர் ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : சுமார் கி.பி. 51 – 52

## இந்நூல் மற்றும் பட்டணம் பற்றி...

1. அப்போஸ்தலனாகிய பவுல் தனது இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தின் போது இப்பட்டணத்திற்கு சென்றார் (அப். 17 ; 1) இதுவே அவர் எழுதிய முதல் நிருபம்.
2. தெசலோனிக்கேயாவிலுள்ள ஜெப ஆலயத்தில் மூன்று ஓய்வு நாட்களாக, கிறிஸ்து பாடுபட்டு மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டியதாக யிருந்து என்று திருஷ்டாந்தப்படுத்தினான் (அப். 17 ; 23).
3. கிரேக்கர் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் இது உலகப் புகழ்பெற்ற ஒரு பட்டணமாக இருந்தது. அப்பொழுது இப்பட்டணத்திற்கு பெயர் தெர்மா (Therma) எனப்படும். அது வெப்பம் மிகுந்த பட்டணமாக இருந்ததால் அதற்கு அப்பெயர் விளங்கிற்று.
4. ரோமப் பேரரசில் நடந்த போரில், இது அந்தோணி, ஆக்டேவியஸ் (Antony, Octavius) என்பவர்களை ஆதரித்தது, அவர்கள் யுத்தத்தில் வெற்றி பெற்றதால் இப்பட்டணம் கி.மு. 42ல் விடுதலைப் பெற்றது.
5. பவுல் இப்பட்டணத்திற்கு சென்ற அந்தக் காலத்தில், இப்பட்டணந்தான் மக்கெதோனியாவில் மிகச் பெரிய பட்டணம்.
6. இப்பட்டணத்தார் பவுலின் சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்டு, ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு, விக்கிரகங்களை விட்டுத் திரும்பினார்கள். (1. தெச. 1 ; 9).
7. இப்பட்டணத்தாரின் விசுவாசம் கிரியையுள்ளதாக இருந்திருக்கிறது; அவர்கள் அன்பு பிரயாசத்திலும், அவர்கள் நம்பிக்கை பொறுமையிலும் வெளிப்பட்டிருக்கிறது (1. தெச. 1 ; 4).

## இந்நூலின் செய்தி

1. தேவ வசனம் விசுவாசிக்கிறவர்களுக்குள்ளே பெலன் செய்கிறது (1. தெச 2;13)
2. நாம் கிறிஸ்துவின் வருகையின் போது பிழையற்ற பரிசுத்தவான்களாக இருக்க வேண்டும். (1. தெச. 3 ; 13).
3. நாம் வேசி மார்க்கத்திற்கு விலகியிருக்க வேண்டும். (1. தெச. 4 ; 3) அதாவது கிறிஸ்துவின் மெய்யான சுவிசேஷத்தை விட்டு விலகக் கூடாது.
4. நாம் அந்தகாரத்திலிருக்கிறவர்களாய் இராமல், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடக்க வேண்டும். (1.தெச.5;4.5).

# தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்

தேவனிடத்திலிருந்து கொடுக்கப்பட்ட என்ற இவ்வசனத்தைக் கவனியுங்கள். "தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே. 4 ; 30). இவ்வசனம் எப்படி இன்றைக்கு எனக்கும், உங்களுக்கும் பொருந்துகிறதாக உள்ளது?

இந்த வசனம் என்ன சொல்லுகிறதென்பதைத் தெரிந்து கொள்ள, என்னோடு சேர்ந்து இரண்டு முக்கிய கருத்துக்களைப் படியுங்கள்.

முதலாவது, இங்கே சொல்லப்பட்டிருக்கிற முறை, ஏதோ விளங்காத ஒன்று பற்றியோ அல்லது அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பிடவில்லை. மாறாக, புரிந்து கொள்ளுவதற்கு மிக எளிமையான முறையிலே தான் சொல்லப்பட்டிருக்கிறது!

இரண்டாவது, நீங்களும், நானும் பரிசுத்த ஆவியானவரை எவ்வழிகளில் துக்கப்படுத்துகிறோம் என்பதை படிப்பதற்காக அழைக்கிறேன். இதைப் படிப்பதன் நோக்கம், பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துவதை தவிர்ப்பது எப்படி என்பதைத் தெரிந்து கொள்வதற்குத் தான்.

இப்பொழுது, இந்த இரண்டையும் விரிவாகப் பார்ப்போம்.

**முதலாவது, இங்கே சொல்லப்பட்டிருக்கும் முறை விளங்காத ஒன்று பற்றியோ அல்லது அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பிடவில்லை.**

**I.** கொரி. 13; 8-10 வசனப் பகுதியில், தேவன் ஒன்றை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அற்புதங்களை ஓய்ந்து போகவும், ஒழிந்து போகவும் பண்ணுவேன் என்று சொல்லியுள்ளார். அத்தோடு, எப்போது அப்படி ஓய்ந்து, ஒழிந்து போகப் பண்ணுவேன் என்றும் சொல்லியுள்ளார். அது, முதல் நூற்றாண்டில் "நிறைவாகிய" புதிய ஏற்பாடு முழுமையான அளவில் வெளியாகும் போது நடக்கும் என்று.

அதைத்தான் தேவன் அப்படியே நிறைவேற்றினார். அதாவது, முதல் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டின் வெளிப்பாடு முழுமையடைந்தவுடன், அற்புதத்தை முடித்து வைத்தார். ஆகவே, இந்த வசனப்பகுதியோ அல்லது புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் பகுதியோ, இன்றைக்கு அற்புதம் இருக்கிறது என்பது பற்றி எதுவும் குறிப்பிடுவதுமில்லை.

எபே. 4 ; 30 வசனமானது, விளங்காத ஒன்று பற்றியோ அல்லது

அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பிடுவதில்லையென்றால், வேறு எதைக் குறிப்பிடுகிறது? இதன் பொருள் மிகவும் எளிமையானது. நானும் நீங்களும் பரிசுத்த ஆவியானவரை துக்கப் படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது! தேவன், நாம் அப்படி செய்வதை விரும்புவதில்லை!

இந்த வசனப் பகுதி, பரிசுத்த ஆவி ஒரு **நபர்** என்றும், அவரை துக்கப்படுத்த முடியும் என்று சொல்லுகிறது. மத உலகில் சிலரால் போதிக்கப்படுவது போல, அவர் ஒரு ஆவி சக்தி அல்ல.

வேதாகமத்தின் பிற பகுதிகள், பரிசுத்த ஆவியானவர், தேவத்துவத்தின் ஒருவர் என்றும், தெய்வீகம் உடையவர் என்றும் தெளிவாக போதிக்கிறது. (மத். 28 ; 19-ல் இயேசுவானவர், தன்னைப் பின்பற்றினவர்களுக்கு, நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும், சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டுள்ளார். பிதாவையும், குமாரனையும் போல இவரும் தெய்வீகத் தன்மையுடையவராக இருக்கிறார்.

**II.** கொரி. 13; 14-ல், தேவன் அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை மீண்டும் பார்க்கிறோம். இது அவருடைய தெய்வீகத்தை குறிப்பதாக உள்ளது.

ஆகையால், நாம் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தும் போது, நாம் தேவனை துக்கப்படுத்துகிறோம்.

வேதாகமத்தின் பிற பகுதிகளில், தேவனைத் துக்கப்படுத்துவது குறித்து விதவிதமாக சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். உதாரணமாக, ஆதி. 6;5, 6-ல், மனிதனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டார் என்றுள்ளது. அன்பான நமது தேவன் மீது, அவர்களின் துன்மார்க்கச் செயல் என்ன பாதிப்பை ஏற்படுத்தியது? அவர் தமது இருதயத்திலே **விசனப்பட்டார்.**

ஏசாயா 43; 24-ல், தன்னுடைய தீர்க்கனாகிய ஏசாயாவைக் கொண்டு தேவன் தன்னுடைய, கலக குணமுள்ள ஜனங்களிடத்திலே பேசினார். தேவன், "உன் பாவங்களினிநிமித்தம் என்னைச் **சங்கடப்படுத்தி**, உன் அக்கிரமங்களினால் என்னை **வருத்தப்படுத்தினாய்**" என்று கூறுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களின் மீதான, தேவனுடைய அன்பான கரிசனை ஏசாயா 63; 9-ல் அழகாக விளக்கப்பட்டுள்ளது. வசனம் 10-ல், தேவன்

அவர்களுக்கு நல்லவராக இருந்தும், அவர்கள் கலகம் பண்ணினார்கள் என்று பார்க்கிறோம். அவர்கள் அப்படிச் செய்ததினாலேயே, **பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள்.**

சங். 78; 40 சொல்லும் வல்லமையான வார்த்தைகளைக் கவனியுங்கள்.

தேவனுடைய ஜனங்கள் வனாந்திரத்திலே அவருக்கு **கோபம் மூட்டினார்கள்.** அவாந்தர வெளியிலே அவரை **விசனப்படுத்தினார்கள்.** இஸ்ரவேலர்கள் எப்படி வனாந்திரத்திலேயும், அவாந்தர வெளியிலும் அவருக்குக் கோபம் மூட்டி, விசனப்படுத்தினார்கள்? தேவனுக்கு எதிராக முறுமுறுத்தார்கள். விக்கிரக வணக்கத்திற்கு உட்பட்டார்கள். தேவனுக்கு கீழ்ப்படியாமற் போனார்கள். மற்றும், ஒழுக்க ரீதியாக பாவம் செய்து விபச்சாரத்தில் ஈடுபட்டார்கள்.

இன்னும் சங்கீதம் 95 : 7-11-ல், தேவனுடைய ஜனங்களின் கலகம் பற்றியும், அதற்காக தேவன் என்ன செய்தார் என்பது பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. தேவன் அவர்களை பற்றி இவ்விதம் சொல்லுகிறார், அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள் என்றும், சோதித்தார்கள் என்றும், கலகம் செய்தார்கள் என்றும், வழுவிப் போகிற இருதயமுள்ளவர்களென்றும், தேவனுடைய வழிகளை அறியாதவர்களென்றும் கூறியுள்ளார்.

அவர்களைக் குறித்தான தேவனுடைய நிலையை தயவுசெய்து கவனியுங்கள். தேவன் அந்த சந்ததியினிமித்தம் விசனப்பட்டார், துக்கப்பட்டார், அத்தோடு, தன்னுடைய கோபத்திலே, "என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று" ஆணையிட்டார்.

தேவன் இன்னுமொரு செய்தியை, எசேக்கியேல் தீர்க்கனைக் கொண்டு தனது ஜனங்களுக்கு அனுப்பினார் எசே. 16 ; 43-ல், அவர்கள் தனக்கு கோபம் மூட்டினதை தேவன் சொல்லுகிறார். அப்படிச் செய்ததினால், "இதோ, நான் உன் வழியின் பலனை உன் தலையின்மேல் சுமரப் பண்ணுவேன்" என்று தேவன் சொன்னார். வேறு வகையாக சொல்வதென்றால், நன்றியற்று, கீழ்ப்படியாமையினால் அவருக்கு கோபம் மூட்டினதற்கான விலையை அவர்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்.

மல்கியா தீர்க்கதரிசியின் நூல் 2-ம் அதிகாரம் 16, 17 ஆகிய வசனங்களில், தேவனுடைய வல்லமையுள்ள வார்த்தைகள் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கே, தேவன், மனைவியைத் தள்ளி விடுதலை வெறுக்கிறேன் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஏனெனில்,

இப்படிப்பட்டவன், கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடி துரோகம் பண்ணுகிறான். இந்தப் பாவத்தைப் பொறுத்தளவில் ஜனங்கள் குற்றமுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால் அதுமாத்திரமல்ல!!

பொல்லாப்பைச் செய்கிறவன் எவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள் பேரில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்றும் சொன்னார்கள். மேலுமாக, தேவனுடைய நீதியைக் குறித்து கேள்வியெழுப்பினார்கள்.

தேவனுடைய பதில் அதற்கு என்னவாக இருந்தது? அவர்களுடைய வார்த்தைகளினாலும் செயல்களினாலும் தேவனை வருத்தமடையச் செய்தார்.

அப்போஸ்தலர் 7ம் அதிகாரத்தில் சனகரீம் சங்கத்திற்கு முன்பாக ஸ்தேவனின் எழுச்சியான பேச்சை தேவன் எழுதிக் கொடுத்துள்ளார். வசனங்கள் 51-53-ல், தைரியம் கொண்ட ஸ்தேவான், நீங்களும், உங்கள் பிதாக்களும் பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நின்றீர்கள் என்று குற்றப்படுத்தினான். எப்படி அவர்கள் அதைச் செய்தார்கள்?

அவர்கள், செவிகளிலும், இருதயத்திலும் விருத்தசேதனமில்லாத வர்களாயிருந்து, வணங்காக் கழுத்துள்ளவர்களாயிருந்தார்கள். இதையே வேறுவிதமாகச் சொல்வதாக இருந்தால், அவர்கள் கடினமுள்ளவர் களாயிருந்து, தேவன் சொல்வதைக் கேட்க மறுப்பவர்களாயிருந்தார்கள். தேவனுடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் துன்பப்படுத்தினார்கள். நீதிபருடைய அதாவது, மேசியாவாகிய கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தார்கள்.

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியாவாகிய இயேசுவை, ஸ்தேவானின் நாட்களில் வாழ்ந்தவர்கள் காட்டிக் கொடுத்து கொலை செய்தார்கள். பழைய பிரமாணத்தைப் பெற்றிருந்தும் அதைக் கைக்கொள்ளமாற் போனார்கள்.

இவ்வகையில், இந்த ஜனங்கள் பரிசுத்த ஆவியை எதிர்த்தார்கள். தேவன், எபிரேயர், நிருபத்தின் ஆசிரியரைக் கொண்டு, வனாந்திரத்தில் இஸ்ரவேலர்களின் நிலையைச் சொல்லியுள்ளார். அவர்கள் பாவம் செய்ததாக தேவன் சொல்லியுள்ளார். அவர்கள் கீழ்ப்படியவில்லை.

தேவனுடைய ஜனங்கள் பாவம் செய்து, கீழ்ப்படியாமல் போனபோது. தேவன் என்ன செய்தார் என்பதை நாம் கற்றுக் கொள்வது அவசியம். நாற்பது வருடங்களாக தேவன் அவர்கள் மீது கோபமாயிருந்தார். அவர்கள் பிணங்கள் வனாந்திரத்திலே விழுந்து போயிற்று. அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று, அவர் ஆணையிட்டார்!

இப்பொழுது, மேற்கண்ட வசனப்பகுதியில் நாம் பார்த்ததை தொகுத்து கவனிப்போம். மனிதனுடைய பாவச் செயலினிமித்தம், தேவன் கீழ்க்கண்ட வழிகளில் விவரிக்கப்பட்டுள்ளார். துக்கப்பட்டிருக்கிறார் (எபே. 4;30ல் நாம் பார்த்தபடி) தேவன் பாரப்பட்டிருக்கிறார். வருத்தப் பட்டிருக்கிறார். கோபம் மூட்டப்பட்டிருக்கிறார். கோபத்தால் நிறைந் திருக்கிறார். எதிர்த்து நின்றிருக்கிறார். கோபப்பட்டிருக்கிறார். சில செயல்களை வெறுத்திருக்கிறார்.

தேவனை இந்த விதமாகப் பாதிப்படையச் செய்த மனிதனின் செயல்களைக் கவனியுங்கள். துன்மார்க்கம், பொல்லாப்பு, பாவங்கள் அல்லது அக்கிரமம், கலகம், முணுமுணுப்பு, விக்கிரக ஆராதனை, கீழ்ப்படியாமை, ஒழுக்கக் கேடு, கடின இருதயம், தேவனை பரீட்சை பார்த்தல், இருதயங்களில் விலகிப் போகுதல், தேவனுடைய வழிகளை அறிய மறுத்தல், அருவருப்புகளைச் செய்தல். இளவயதின் நாட்களை நினையாதிருத்தல், வணங்காக் கழுத்து, இருதயத்திலும், செவியிலும் விருத்தசேதனமில்லாமை, தீர்க்கதரிசிகளை துன்புறுத்திக் கொலை செய்தல், இயேசுவைக் காட்டிக் கொடுத்து, கொலை செய்தல், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமை, மனைவியைத் தள்ளிவிடுதல், துரோகம் பண்ணுதல், பொல்லாப்பை நல்லது என்று சொல்லுதல் மற்றும் தேவ நீதியைக் கேள்வி கேட்டல்.

தேவன் பாதிப்படைந்ததோடு, அந்தச் செயல்களினிமித்தம், தேவன் என்ன செய்தார் என்று சொல்லுகிறார் என்பதைத் தயவாய் கவனியுங்கள். அவர்களுக்கு எதிராக அவர் ஒரு விரோதியானார்; அவர்களுக்கு எதிராக யுத்தம் செய்தார்; தன்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று, தன்னுடைய கோபத்திலே சொன்னார். அவர்கள் செய்கையின் பலனை அவர்கள் தலையின்மேல் திருப்பினார். அதாவது, எதை விதைத்தார்களோ அதை அவர்கள் கண்டிப்பாக அறுக்கும்படி பார்த்துக் கொண்டார்.

இப்பொழுது, அநேக வேத பகுதிகளைக் கொண்டு என்ன படித்தோமோ அவைகளை (எபே. 4;20) உடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதீர்கள் என்று தேவன் கட்டளையிடும்பொழுது, தேவன், நாம் பாவ வாழ்க்கையில் ஈடுபடக்கூடாது என்றே சொல்லுகிறார். தேவனுக்குக் கீழ்ப்படியாமல் நாம் வாழக்கூடாது. பாவத்திலே வாழ்ந்து, தேவனுக்கு எதிராக கலகம் செய்வது, தேவனை துக்கப்படுத்துகிறது. அப்படிப்பட்ட பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்பவில்லையென்றால், தேவன் நம்மை கடுமையாக தண்டிப்பார்.

**EZSR** **CHARLE D/PALMA**

# கொஞ்சத்தில் உண்மையாயிரு

**தே**வனிடத்தில் பக்தியாய் இருப்பதற்கு சிலர் ஒரு குறையும் இல்லாமல், எல்லா வசதிகளையும் தேவன் செய்து தர வேண்டும் என எண்ணுகின்றனர். தேவனிடத்தில் சேருகிறதற்கு சிலர் பேரம் பேசுகின்றனர். தேவன் இதைச் செய்தால் நான் அவருக்கு பிரியமாயிருப்பேன் தவறாமல் சபை கூடுவேன் என்றெல்லாம் சிலர் சொல்வதை நாம் கேட்டிருக்கலாம். ஆனால் நம் ஆவிக்குரிய எஜமான் நம்மை நோக்கி, "கொஞ்சத்தில் உண்மையாயிரு என்று ஆலோசனை சொல்லுகிறார்.

பரலோக ராஜ்ஜியத்தைக் குறித்து பல உவமைகள் மூலம் விளங்கப் பண்ணின நம் ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகள், அவருடைய ராஜ்ஜியமாகிய சபையில் (கொலே 1 : 3) இருக்கும் நாம் பின்பற்ற வேண்டியே அவைகளை சொல்லியுள்ளார். அவற்றில் ஒன்று தான் மத் 25ம் அதிகாரத்தில் சொல்லப்பட் தாலந்து - உவமை. கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தவனை அநேகத்தின் மேல் அதிகாரியாக வைக்கப்படும் உவமை. இதை நமக்கு போதனையாகவும் (ரோம 15 : 4) திருஷ்டாந்தங்களாகவும் (1 கொரி 10 : 11) உள்ள பழைய ஏற்பாட்டு சாட்சிகள் சிலர் மூலம் நாம் புரிந்து கொள்ள தேவன் கிருபை செய்வாராக.

முதலாவதாக 2 ராஜாக்கள் 22ம் அதிகாரத்தில் நாம் காணும் யோசியா ராஜாவைப் பற்றி வாசிக்கும் போது எட்டு வயதில் ராஜாவாதி பதினெட்டாம் வயதில் ஆலயத்தை பழுது பார்க்க கட்டளையிட்டான். இவனது முன்னோர்களைகளைப் பற்றி நாம் படித்து பார்க்கும் போது அநேகர் விக்கிரகங்களை வழிபடும் ஜனங்களாயிருந்தார்கள். அவர்களுக்குப் பின் இவனுடைய ஆட்சியில் தான் நியாயப் பிரமாண புத்தகம் கண்டு எடுக்கப்பட்டது என்று பார்க்கிறோம். அந்த புத்தகத்தின் வார்த்தைகள் அவனுக்கு முன்பாக வாசிக்கப்பட்ட போது அதைக் கேட்ட யோசியா தன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுக்க தீர்மானம் செய்தான் (2. ராஜ 22 : 11, 13)

இச்சம்பவம் நடந்த சூழ்நிலையை சற்று ஆராய்ந்து பார்ப்போம். 2.ராஜா 21 : 3 வசனத்தில் நாம் காண்கிறபடி இவனுடைய தாத்தா மனாசே ஆகட்டும் இவன் தகப்பன் ஆமோன் ஆகட்டும் யாவரும் விக்கிரகங்களை வழிபட்டவர்கள். இன்றைய நாளில் கூட அநேகர் தங்கள் தகப்பனார் வழிபடுவதால் தாங்களும் விக்கிரகங்களை வழிபடுவதாக

சொல்லுகிறார்கள். ஆனால் யோசியா அப்படி எண்ணவில்லை. மேலும் உலக இன்பங்கள் அனுபவிக்க துடிக்கும் வாலிப வயதில் யோசியா இருந்தான். அதற்கு தேவையான செல்வமும் பதவியும் அவனிடம் இருந்தது. இதையெல்லாம் நாம் ஆராய்ந்து பார்க்கும் போது அவன் தேவனுக்குக் கீழ்படியும் வாய்ப்பு மிகவும் கொஞ்சமாகவே இருந்தது. இருப்பினும் தேவனுடைய வார்த்தைகளை அவன் கேட்டபோது அவன் அதற்குக் கீழ்ப்படிந்தான்.

தேவனுடைய வார்த்தைக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை நாம் யோசியாவிடம் கற்றுக் கொள்கிறோம். உலகில் ஒரு மனிதனுக்கு பதவி, மதிப்பு மரியாதை ஆகியவை அவன் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய தடையாய் இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால் யோசியாவின் இருதயம் இளகியது, தன்னை தாழ்த்தினான், தன் வஸ்திரங்களை கிழித்து மனந்திரும்பி அழுததால் (2 ராஜா 22 : 20) தேவன் அவன் விண்ணப்பங்களுக்கு செவி கொடுத்தார். இதை வாசிக்கும் நாம் யாராயிருந்தாலும் இந்தக் கடைசி நாட்களில் தேவன் தம் குமாரனாகிய இயேசுக்கிறிஸ்து மூலம் வெளிப்படுத்தும் (எபி 1: 2) அவருடைய சித்தத்திற்கு செவி கொடுத்து தேவனுக்கு உண்மையாயிருப்போம்.

இரண்டாவதாக கொஞ்சத்தில் உண்மையாயிருந்த சாட்சியாக "அபியா ராஜாவை" 2 நாளா 13ம் அதிகாரத்தில் நாம் பார்க்கிறோம். இஸ்ரவேல் ஜனம் இரண்டு பிரிவாக பிரிந்து வடராஜ்ஜியம் உருவாகி முதல் ராஜாவாயிருந்த யெரோபெயாம் காலத்தில் தான் இந்த அபியா தென்ராஜ்ஜியமாகிய யூதாவுக்கு ராஜாவாயிருந்தான். இருவருக்கும் யுத்தம் ஏற்பட்டது. யெரோபெயாம் எட்டு லட்சம் வீரர்களோடு, அபியா வெறும் நான்கு லட்சம் வீரர்களோடும் ஆயத்தமானார்கள். மேலும் யெரோபெயாமின் வீரர்கள் பலத்தவர்கள் என்று வசனம் மூன்று நமக்கு தெரிவிக்கிறது அபியா இந்த சூழ்நிலையை உணர்ந்து தான் இருந்தான். தன்னிடம் உள்ளவர்களை விட எதிரியிடம் இரண்டு மடங்கு உள்ளதை அறிந்து (வசனம் 8ல்) "நீங்கள் ஏராளமான கூட்டம் இருப்பினும் கர்த்தருக்கு விரோதமாக பெலன் கொள்ள நினையாதிருங்கள் என்றும், எங்களுக்கோ கர்த்தரே தேவன் (வச 10) என்றும் கர்த்தரைக் குறித்து மேன்மை பாராட்டுகிறார். திரளான இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தின யோசுவா சொன்ன பிரபலமான வாக்கியமாகிய, "நானும் என் வீட்டாரும்மோவென்றால் கர்த்தரை சேவிப்போம்" என்பதைப் போல இந்தக் குட்டி அபியா ராஜாவும் திரள் கூட்டமான யெரோபெயாமின். ராணுவத்தைப் பார்த்துச் சொன்னான். மேலும் வசனம் 12ல் தேவன் எங்கள் சேனாபதி, கர்த்தருக்கு விரோதமாக யுத்தம் செய்தால் சித்திக்காது என்றும் தைரியமாகச் சொன்னான்.

இதை வாசிக்கும் நாமும் நம்முடைய விசுவாசத்தில் பெருக வேண்டும். இந்த தேவனிடம் சேரும் சிலாக்கியம் கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தால் நாம் பெறுகிறோம் (எபே. 3:12) அதினாலே நமக்கு தைரியம், திட நம்பிக்கை உண்டாயிருக்கிறது. அபியா ராஜாவுக்கு வெற்றியை தந்த தேவன் நமக்கும் வாழ்க்கையில் நிச்சயமாக வெற்றியை தருவார்.

இக்கட்டுரையின் நிறைவான மூன்றாவது நபராக மிகாயா தீர்க்கதரிசியைப் பற்றி 2 நாளா 18ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். நம் அனைவருக்கும் அறிமுகமான, வல்லமையான எலியா தீர்க்கதரிசியையே யாக்கோபு (5:17) "நம்மைப் போல் பாடுள்ள மனுஷன்" என்றுக் குறிப்பிடுவதால் இந்த மிகாயாவும் அப்படிப்பட்டவர்தான். தேவனை வணங்கும் யூதா ராஜா யோசபாத் தான் வசதியாய் இருந்தபோது கூடா நட்பாக இஸ்ரவேல் ராஜா ஆகாப் உடன் உறவாடினான். நம்மில் கூட சிலர், தேவன் நமக்கு ஐசுவரியத்தினால் ஆசீர்வதிக்கும் போது கூடா நட்பில் தேவனை விட்டு விலகும் சந்தர்ப்பங்களைக் காண்கிறோம். இந்த ஆகாப் சும்மா இல்லாமல், வீண் சண்டைக்கு செல்ல யோசபாத் ராஜாவை கூட்டாக அழைத்தான். யோசபாத் அதற்கு சம்மதித்து தீர்க்கதரிசிகளிடம் விசாரிக்கலானான். இதைப் போலத்தான் தேவனுடைய பிள்ளைகள் கூட சிலர் சேரக்கூடாதவர்களோடு ஐக்கியம் வைத்துக் கொண்டு தாங்களும் வளராமல், வளரும் கிறிஸ்தவர்களுக்கும் தடையாய் இருப்பதைக் காணலாம். உலக சிநேகிதம் தேவனுக்கு விரோதமான பகை (யாக் 4: 4) என்று வசனம் நம்மை எச்சரிப்பதால் இவற்றில் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

நானூறு தீர்க்கதரிசிகளிடம் விசாரித்த பின் திருப்தி அடையாத யோசபாத் கடைசியில் மிகாயாவையும் அழைக்க சொல்லுகிறான். இந்த மிகாயா எப்போதும் தீமையாகவே தன்னை பற்றி சொல்லுவான் என்று ஆகாப் மறுத்தான். உண்மையே பேசுபவர்களுக்கு புகழ் மாத்திரம் அல்ல, தற்காலிகமான பகையும் உண்டாகும் என்பதை நாம் அறிய வேண்டும். வேதபாரகர் பரிசேயர், ஆசாரியர் முதலானோர் அதனால் தான் ஆண்டவரைப் பகைத்தார்கள். சத்தியத்தைச் சொன்னதினால் நான் சத்துருவானேனா? என்று பவுல் அப்போஸ்தலனும் கேட்கிறார்.

சரி விஷயத்திற்கு வருவோம். மிகாயா அழைக்கப்பட்ட போது அவனிடம் அந்த 400 போலி தீர்க்கதரிசிகளும் வந்து மிரட்டி தாங்கள் சொன்னது போல பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லும்படி ஏவினார்கள். இன்றைய நாளில் கூட அநேக தேவனுடைய பிள்ளைகள் அநேகர் செய்கிறார்கள் என்பதற்காக சிலுவையையும், இயேசுவின் படத்தையும், இயேசுவின் தாயாகிய மரியாளின் படத்தையும் வணக்கத்திற்குரியதாக


தெரிந்து கொள்கிறார்கள். ஆனால் வேத வசனப்படி இவையாவும் தவறே ஆகும். ஆராதிக்கப்பட வேண்டியவர் உருவமற்ற பிதாவாகிய தேவனேயாகும். அவரை சபையில், கிறிஸ்து இயேசுவின் மூலமாய் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் நாம் ஆராதிக்க வேண்டும் என்று கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசம் தெளிவு படுத்துகிறது. (யோவா 4 : 24, எபேசி 3: 21, அப் 20 : 7) ஆனால் மிகாயாவைப் பாருங்கள், அவனுக்கு எதிராக அத்தனைப் பேர் வந்தும் அவன் நாவு உச்சரித்த வார்த்தைகளை கேளுங்கள், "என் தேவன் சொல்வதையே சொல்வேன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" என்றான். எனக்குப் பிரியமான தேவ பிள்ளையே இப்படி பட்ட வைராக்கியம் நம்மிடத்தில் வேண்டுமல்லவா? அப்போஸ்தலன் பேதுருவும் ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின் படி போதிக்க வேண்டும் என்றார் (1 பேது 4 : 11) ஆனால் இன்றைய நாளில் சிலர் தேவன் என்னோடே தனியாக பேசினார் என்று தேவனுடைய வாக்கியங்களுக்கு விரோதமாக உபதேசிக்கின்றனர். அப்படிப்பட்டவர்களை விட்டு விலக வேதம் நம்மை எச்சரிக்கின்றது.

உண்மையை பேசின மிகாயாவுக்குக் கன்னத்தில் அடியும் (வச 23) இடுக்கத்தின் அப்பம் மற்றும் இடுக்கத்தின் தண்ணீரையும் சாப்பிடும் சிறை தண்டனை (வச 26)யும் தான் கிடைத்தது. ஆனால் அவன் சொன்னபடியே ஆகாப் ராஜா யுத்தத்தில் மடிந்தான். இன்றளவும் பேசப்படுகிற சாட்சியாக மிகாயா விளங்குகிறான்.

கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர். எனவே மத் 5 : 37ன் படி நாமும் உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லை என்றும் சொல்ல வேண்டும். தங்கள் பேர் கெட்டு விடும் என்பதற்காக சிலர் இவற்றை மாற்றி சொல்லி வருவதைக் காண்கிறோம். மத் 12:36ன் படி நாம் பேசும் வார்த்தைகள் யாவற்றிற்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமல்லவா.

ஆகவே யோசியா ராஜாவைப் போல் வேதாகமத்திற்கு முன்னுரிமைக் கொடுத்து நம்மை தேவனுக்கு முன்பாக தாழ்த்துவோம்; அபியா ராஜாவை போல் நம்மிடத்தில் குறைவான பெலனிருந்தாலும், சர்வ வல்லமையுள்ள தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களாயிருப்போம்; நிறைவாக மிகாயாவைப் போல் திரள் கூட்டம் பக்கமாக சாயாமல் தேவன் சார்பாக வைராக்கியமாக நிற்போம். கிருபையானது உங்களனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.


**Bro. K. பாண்டியன்**
அரக்கோணம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annual Subscription Rs. 30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த
வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு

சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by **Church of Christ, Kangayam**
Printed at Konar Printers, Madurai - 625 012. **Editor : S. Rajanayagam**

DESIGNED BY SAKURA ERODE © 2254004